**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

## உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்களின் பதவிக்காலம் நிறைவடைந்தது

இலங்கைக்கான தலைமை இராஜதந்திரியாக, உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்களது பதவிக்காலம் 2023 டிசம்பர் 15 ஆம் திகதி நிறைவடைந்துள்ள நிலையில், அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர் ஸ்தானிகராக அவர் நியமனம் பெறுகின்றார்.

2. 2020 மே மாதம் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார், அத்துடன் இந்தியாவின் உயர் மட்ட இராஜதந்திரியாக அவர் பதவி வகித்த காலப்பகுதி இருதரப்பு பங்குடமையில் ஒப்பிட முடியாத பல மைல்கற்களை கண்டிருந்தது. இந்திய இலங்கை உறவுகளில் பல்வேறு உயர் சாதனைகளை எட்டுவதிலும் அவர் மிகமுக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருந்தார்.

3. அவரது பதவிக் காலத்தின்போதான சிறப்பம்சங்களுக்கு மத்தியில், 2022 ல் இலங்கை பொருளாதார ரீதியான சவால்களை எதிர்கொண்டிருந்த நிலையில் அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பன்முக உதவி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும். அதுமட்டுமல்லாமல், திருகோணமலை எண்ணெய் வளாகத்தினை பயன்படுத்துதல் மற்றும் அபிவிருத்திசெய்தல், இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் மற்றும் LIOC ஆகியவற்றுக்கிடையிலான கூட்டு வர்த்தக செயற்பாடுகள் போன்றவற்றுக்கான நெறிமுறை ஒப்பந்தங்கள் 2002 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டிருந்தமை இக்காலப்பகுதியின் முக்கிய சிறப்பம்சங்களில் உள்ளடங்குகின்றன. மேலும் கொவிட் 19 பெருநோய் காலப்பகுதியில் 25 தொன்கள் நிறையுடைய மருந்துப்பொருட்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள், அன்டிஜன் சோதனை தொகுதிகள், திரவநிலை மருத்துவ ஒட்சிசன் போன்றவை அவரது மேற்பார்வையின் கீழ் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தன. இக்காலப்பகுதியிலேயே, இலங்கைக்கான மனிதாபிமான உதவிப் பொருட்களின் விநியோகத்தினை துரிதப்படுத்துவதற்காக இந்திய கடற்படை மற்றும் விமானப்படை கலங்கள் பணிக்கமர்த்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

4. மேலும், அவரது பதவிக்காலத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஈடுபாடுகள் பெருமளவில் மேம்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களுக்கான ஒத்துழைப்பு, ஒன்றிணைக்கப்பட்ட மின்சக்தி வலையமைப்பு, திருகோணமலை அபிவிருத்தி திட்டம், யு.பி.ஐ விண்ணப்ப அங்கீகாரம் மற்றும் டிஜிட்டல் முறையிலான கொடுப்பனவுகள், இந்திய ரூபாய் மூலமாக வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இக்காலப் பகுதிக்குரியவையாகும். அதுமட்டுமல்லாமல் இலங்கையுடனான பாரிய வர்த்தக பங்காளராகவும் இந்தியா மேலெழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தி பங்காளித்துவத்தில் இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டம் போன்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க திட்டங்கள் இடம்பெற்றிருந்த நிலையில், பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்கான 15 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை, கிட்டத்தட்ட 100 பௌத்த மதகுருமார்களுடன் 2021 அக்டோபரில் புனித நகரான குஷிநகருக்கு முதலாவது சர்வதேச விமானம் இலங்கையிலிருந்து பயணித்திருந்தமை போன்ற பல மகத்தான முன்னெடுப்புகள் மூலமாக தலைமுறைகள் கடந்த பௌத்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் மற்றும் சென்னை இடையிலான விமான சேவைகள் மற்றும் கப்பல் சேவைகள் போன்றவற்றை மீள ஆரம்பித்தமை மூலமாக இருதரப்பு தொடர்புகளின் பல்வேறு பரிமாணங்கள் மேலும் வலுவடைந்திருந்தன.

5. புதிய இந்திய உயர் ஸ்தானிகராக திரு சந்தோஷ் ஜா அவர்கள் கடமையேற்கின்றார். ஐரோப்பிய ஒன்றியம், பெல்ஜியம் மற்றும் லக்சம்பேர்க் ஆகியவற்றுக்கான இந்திய தூதுவராக திரு சந்தோஷ் ஜா அவர்கள் தற்போது கடமையாற்றி வருகின்றார். 30 வருடத்திற்கும் அதிககால சேவையில் திரு சந்தோஷ் ஜா அவர்கள், 2007 முதல் 2010 வரையான காலப் பகுதியில் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் கவுன்சிலராக கடமையாற்றியமை உட்பட வேறுபட்ட பதவி நிலைகளில் பல்வேறு நாடுகளிலும் புதுடில்லியிலும் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

****

**கொழும்பு**
**16 டிசம்பர் 2023**